## அரசுத் தேர்வுகள் இயக்ககம்–சென்னை–600 006
## மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு – மே–2022
## தாவரவியல் – விடைக்குறிப்பு

**குறிப்பு** 1) நீலம் அல்லது கருப்பு மையினால் எழுதப்பட்ட விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

2) பகுதி – 1ல் கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதப்பட்டிருக்க வேண்டும்.

மொத்த மதிபெண்கள் : 70

### பகுதி –I

அனைத்து வினாக்களுக்கு விடையளிக்கவும் $15 \times 1 = 15$

| TYPE - A | | | TYPE – B | | |
|---|---|---|---|---|---|
| 1 | ஈ | டிரான்ஸ்போசான் | 1 | இ | விதைத்தழும்பு |
| 2 | ஈ | பிரிகூறு | 2 | ஈ | CFC மற்றும் $Co_2$ |
| 3 | அ | AUG | 3 | ஈ | 1–(iii), 2– (i), 3–(iv), 4–(ii) |
| 4 | ஈ | 1–(iii), 2– (i), 3–(iv), 4–(ii) | 4 | ஈ | செயல் வாழிடம் |
| 5 | ஈ | ஆல்கலைன் பாஸ்ஃபடேஸ் | 5 | ஆ | நுண்வித்து |
| 6 | ஈ | 2 – 10% | 6 | ஈ | டிரான்ஸ்போசான் |
| 7 | ஈ | CFC மற்றும் $Co_2$ | 7 | அ | குழுமம்→சூழல் மண்டலம் → நிலத்தோற்றம் → உயிர்மம் |
| 8 | அ | குழுமம்→சூழல் மண்டலம் → நிலத்தோற்றம் → உயிர்மம் | 8 | ஈ | 2 – 10% |
| 9 | ஆ | நுண்வித்து | 9 | அ | ஒரே இரகத்திற்குள் கலப்பு |
| 10 | அ | பிளாஸ்மிட் பொலிவர் மற்றும் ரோட்ரிகஸ் | 10 | ஆ | பாக்டீரியங்கள் |
| 11 | ஈ | செயல் வாழிடம் | 11 | அ | பச்சை விதையிலை |
| 12 | அ | பச்சை விதையிலை | 12 | ஈ | ஆல்கலைன் பாஸ்ஃபடேஸ் |
| 13 | இ | விதைத்தழும்பு | 13 | அ | பிளாஸ்மிட் பொலிவர் மற்றும் ரோட்ரிகஸ் |
| 14 | ஆ | பாக்டீரியங்கள் | 14 | ஈ | பிரிகூறு |
| 15 | அ | ஒரே இரகத்திற்குள் கலப்பு | 15 | அ | AUG |

## பகுதி –II

எவையேனும் 6 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் $6 \times 2 = 12$

வினா எண்.**24**க்கு கண்டிப்பாக விடையளிக்கவும்

| | | |
|---|---|---|
| 16 | ஒரு சில சிற்றினங்களில் சூலுறையின் உள்ளடுக்கு சிறப்பு பெற்று கருப்பையின் ஊட்டத்திற்கு உதவுகிறது.இந்த அடுக்கு எண்டோதீலியம் அல்லது சூலுறை டபீட்டம் என்று அழைக்கப்படுகிறது. | 2 |
| 17 | ஒரு உயிரினத்தின் தெரியாத மரபணு வகையத்தை ஒடுங்கு ஒத்தப்பண்பிணைவுடன்(ஒடுங்கு பெற்றோர்) கலப்பு செய்தலுக்குச் சோதனைக் கலப்பு என்று பெயர். | 2 |
| 18 | படியெடுத்தல் நிகழ்விற்கு DNAயில் அமைந்த ஒரு குறிப்பிட்ட காரவரிசை முன்னியக்கியாக தேவைப்படுகிறது. இது **TATA** என்று அமைந்த காரவரிசை ஆகும். இப்பகுதி **TATA** பேழை.<br>(அல்லது)<br>படியெடுத்தல் தொடக்க இலக்கு 25 கார வரிசைகளை இனங்கண்டறிய மேலோட்ட தொடர் வரிசை **TATAAT** எனப்படும் **TATA** அல்லது ஹாக்னஸ் பேழை மைய முன்னியக்கியாகக் காணப்படுகிறது. | 2 |
| 19 | மரபு பொறியியலில் பயன்படுத்தப்படும் நொதிகள்<br>அ. தடைக்கட்டு நொதிகள்<br>ஆ. DNA லைகேஸ்<br>இ. ஆல்கலைன் பாஸ்ஃபட்டேஸ் (ஏதேனும் 2 மட்டும்) | 2 |
| 20 | மரபணுதொகையத்தில் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம்பெயரும் DNA தொடர் வரிசைகள் தாவும் மரபணுக்கள்<br>(அல்லது)<br>இடமாற்றம் அடையும் மரபணுசார் கூறு. | 2 |
| 21 | **உணவு சங்கிலி**<br>உற்பத்தியாளர்களிடமிருந்து ஆற்றல் இறுதி உண்ணிகள் வரை கடத்தப்படுவது உணவுச்சங்கிலி என்று அழைக்கப்படுகிறது. | 2 |
| 22 | 1. ரயில் பெட்டி தயாரிப்பதற்கு<br>2. பாரவண்டி தயாரிப்பதற்கு,<br>3. பாலம் கட்டுவதற்கு<br>4. கப்பல் கட்டுவதற்கு,<br>5. படகு கட்டுவதற்கு<br>6. கதவு நிலைகள் தயாரிப்பதற்கு,<br>7. பிளைவுட் தயாரிப்பதற்கு,<br>8. கதவுகள் செய்வதற்கு பயன்படுகிறது. (ஏதேனும் 2 மட்டும்) | 2 |
| 23 | உயிரினங்களுக்கு இடையிலான இடைச்செயல்களில் இரு உயிரிகளின் மரபியல் மற்றும் புற அமைப்பியல் பண்புகளில் ஏற்படும் பரிமாற்ற மாறுபாடுகள் பலதலைமுறையை கருத்தில் கொண்டு தொடர்கிறது. | 2 |
| 24 | வேறுபட்ட செல்களின் உட்கரு அற்ற புரோட்டோபிளாஸ்ட்களை இணைத்துப் பெறப்படுவது சைபிரிட் என அழைக்கப்படுகிறது. | 2 |

## பகுதி –III

எவையேறும் 6 வினாக்களுக்கு விடையளிக்கவும் 6 × 3 = 18வினா

எண்.33க்கு கட்டாயமாக விடையளிக்கவும்

<table>
<tr><td>25</td><td>1. தன்னிச்சையாக பெருக்கமடையக்கூடியதாக இருக்க வேண்டும்.<br>(பெருக்கமடைதலின் தோற்றுவியை கொண்டிருக்க வேண்டும்)<br>2. அளவில் சிறியதாக இருக்க வேண்டும். (10 Kbக்கும் குறைவான எடையுடையது).<br>3. பொருத்தமான அடையாளக் குறியை கொண்டிருக்க வேண்டும்.<br>4. தனிப்பட்ட இலக்குக் களங்களை பெற்றிருக்க வேண்டும். (ஏதேனும் 3 மட்டும்)</td><td>3</td></tr>
<tr><td>26</td><td>ஒரு உயிரியில் மாற்றுப்பண்புடைய இரு அல்லீல்களும் ஒரே சமயத்தில் பண்புகளை வெளிப்படுத்தும் நிகழ்விற்கு இணை ஓங்குத்தன்மை என்று பெயர்.<br><br>எ.கா. 1. கமீலியாவில் சிவப்பு மற்று வெள்ளை மலர்கள்<br>2.கதிர் அரிவாள் வடிவ ஹீமோகுளோபின்<br>3.மனிதர்களின் ABO இரத்த வகை(ஏதேனும் ஒன்று மட்டும்)</td><td>2<br><br>1</td></tr>
<tr><td>27</td><td>

<br>படம் : 2 மதிப்பெண்கள்<br>பாகங்கள் : 1 மதிப்பெண்<br>ஏதேனும் இரண்டு பாகங்கள்</td><td>3</td></tr>
<tr><td>28</td><td><table><tr><th>முதல்நிலை அறிமுகப்படுத்துல்</th><th>இரண்டாம் நிலை அறிமுகப்படுத்துதல்</th></tr><tr><td>அறிமுகப்படுத்தப்படும் தாவரம் மரபணு வகைய விகிதத்தில் எவ்வித மாறுபாடுறாமல் புதிய சூழ்நிலைக்கு தன்னைத் தகவமைத்துக் கொள்ளுதல்</td><td>அறிமுகப்படுத்தப்படும் இரகமானது தேர்ந்தெடுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு அதிலிருந்து மேம்பட்ட இரகத்தை தனித்துப் பிரித்து அதனுடன் உள்ளூர் இரகத்தைக் கலப்பு செய்து ஒன்றோ அல்லது ஒன்றிக்கு மேற்பட்ட பண்புகளை அவற்றில் மாற்றுவதாகும்</td></tr></table></td><td>3</td></tr>
<tr><td>29</td><td>நீரின் ஆழம் அதிகரிக்க அதிகரிக்க அதன் வெப்பநிலை அடுக்குகளில் ஏற்படும் மாற்றமே வெப்ப அடுக்கமைவு என அழைக்கப்படுகிறது.<br>வகைகள் :–<br>1. எபிலிம்னியான்<br>2. மெட்டாலிம்னியான்<br>3. ஹைப்போலிம்னியான்</td><td>2<br><br>1</td></tr>
</table>

<table>
<tr><td>30</td><td>1. தாவர மிதவை உயிரி நிலை<br>2. நீருள் முழ்கிய தாவர நிலை<br>3. நீருள் மூழ்கி மிதக்கும் நிலை<br>4. நாணற் சதுப்பு நிலை<br>5. சதுப்பு புல்வெளி நிலை<br>6. புதர்ச்செடி நிலை<br>7. காடு நிலை</td><td>3</td></tr>
<tr><td>31</td><td>விவசாயம், காடழிப்பு, கழிவு நீக்கம், தொழிற்சாலைகள், தொல் படிவ எரிப்பொருட்களை எரித்தல் போன்ற மானுட நடவடிக்கைகள் மூலம் நேரடியாகவோ (அ)மறைமுகமாகவோ பசுமை இல்ல வாயுப்பொருட்களை மொத்தமாக உருவாக்குதல் கார்பன்வழித்தடம் எனப்படும்.</td><td>3</td></tr>
<tr><td>32</td><td>
<table>
<tr><th>குறியீடு இழை (Coding strand)</th><th>குறியீடற்ற இழை (Non-coding Strand)</th></tr>
<tr><td>1. குறியீடு இழையானது குறியீடு கொண்ட இழை/வார்ப்பில்லாத இழை/ வெளிப்பாடடையும் இழை எனப்படுகிறது.</td><td>குறியீடற்ற இழை என்பது வார்ப்பு இழை/ குறியீடு செய்யா இழை/ வெளிப்பாடடையா இழை எனவும் அழைக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>2. DNAயின் வார்ப்பு இழைக்கு எதிராக 5’→ 3’திசையிலமைந்த இழை குறியீடு உற்ற இழை எனப்படுகிறது.</td><td>DNA வில் 3’→ 5’திசையில் அமையப்பெற்ற, mRNAபடியெடுத்தலுக்கு வார்ப்பாக அமைந்த இழை வார்ப்பு இழை எனப்படுகிறது.</td></tr>
</table>
</td><td>3</td></tr>
<tr><td>33</td><td>நுண்ணுயிர் நீக்கம் என்பது வளர்ப்பு ஊடகம், வளர்ப்பு கலன்கள், பிரிகூறு போன்றவற்றிலிருந்து நுண்ணுயிர்களான பாக்டீரியங்களையும், பூஞ்சைகளையும் நீக்கும் தொழில்நுட்பம்.<br><br>வளர்ப்பு அறையின் தரை மற்றும் சுவர்களை சோப்பு கொண்டும், பிறகு 2% சோடியம் ஹைப்போகுளோரைட் கொண்டு நுண்ணுயிர் நீக்கம் செய்யப்பட வேண்டும்.<br>அல்லது<br>95% எத்தனால் கொண்டு நுண்ணுயிர் நீக்கம் செய்யப்பட வேண்டும்.<br>அல்லது<br>15 நிமிடங்களுக்கு புற ஊதா கதிர் வீச்சுக்கு உட்படுத்த வேண்டும்.</td><td>2<br><br>1</td></tr>
</table>

## பகுதி –IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் $5 \times 5 = 25$

| | | |
|---|---|---|
| 34.அ | டபீட்டம் மகரந்தப்பை சுவரின் உள் அடுக்காகும்.<br>**வகைகள்**–1. சுரப்பு டபீட்டம் (புறப்பக்க / செல் வகை )<br>2.ஊடுருவும் டபீட்டம் ( பெரிபிளாஸ்மோடிய வகை )<br>**பணிகள்**<br>1. வளரும் நுண்வித்துக்களுக்கு ஊட்டமளிக்கிறது<br>2. யுபிஷ் உடலத்தின் மூலம் ஸ்போரோபொலினின் உற்பத்திக்கு உதவுவதால் மகரந்தச்சுவர் உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றுகிறது.<br>3.போலன்கிட்டுக்கு தேவையான வேதிப்பொருட்களை தந்து அவை மகரந்தத்துகளின் பரப்புக்கு கடத்தப்படுகிறது.<br>4.சூலக முடியின் ஒதுக்குதல் வினைக்கான எக்சைன் புரதங்கள் எக்சைன் குழிகளில் காணப்படுகின்றன. இவ்வகைப் புரதங்கள் டபீட்ட செல்களிலிருந்து பெறப்படுகின்றன. (பணிகள் ஏதேனும் 3 மட்டும்) | 1<br><br>1<br><br><br><br><br>3 |
| 34.ஆ | **எ.கா:**அந்தி மந்தாரை தாவரம் (அ) *மிராபிலிஸ் ஜலாபா*<br>விளக்கம் (அல்லது) வரைபடம்<br>விகிதம் (1 : 2 : 1) | 1<br>3<br>1 |
| 35.அ | ஒத்திசைவு குரோமோசோம் இணைகளின் சகோதரி அல்லாத குரோமாட்டிட்களுக்கிடையே இணையான துண்டங்கள் பரிமாற்றப்பட்டுப் புதிய மரபணுச் சேர்க்கை தோன்றும் உயிரிய நிகழ்விற்குக் குறுக்கேற்றம் என்று பெயர்.<br><br> | 2<br><br>3 |

| | | |
|---|---|---|
| 35.ஆ | விலங்கு உணவாக அல்லது மனித துணை உணவாக பயன்படுத்தப்படும் நுண்ணுயிரிகளின் உலர்ந்த செல்களே தனிசெல் புரதம் என அழைக்கப்படுகிறது.<br>**பயன்கள்**<br>1.புரதத்திற்கு மாற்றாக பயன்படுகிறது.<br>2.ஆரோக்கியமான முடி மற்றும் தோலுக்கான அழகுப் பொருட்களில் பயன்படுத்தப்படுகிறது<br>3.புரதத்தின் மற்றும் ஊட்டச்சத்துக்களின் சிறந்த ஆதாரமாக பறவைகள், மீன்கள், கால்நடைகள் போன்றவற்றிற்கு உணவாக பயன்படுத்தப்படுகிறது.<br>4. உணவு தொழிற்சாலைகளில் வைட்டமின் கொண்ட மணமூட்டியாகவும், சூப்புகள், தயார் நிலை உணவுகள் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது.<br>5.காகித தயாரிப்பிலும், தோல் பதப்படுத்துதலிலும், நுரை நிலைநிறுத்தியாகவும் பயன்படுகிறது. ( ஏதேனும் 3 பயன்கள் மட்டும்) | 2<br><br><br><br><br><br>3 |
| 36.அ | **முழு ஆக்குத்திறன்**<br>**வேறுபாடுறுதல்**<br>**மறு வேறுபாடுறுதல்**<br>**வேறுபாடிழத்தல்**<br>1. **முழு ஆக்குத்திறன்:** மரபியல் திறன்களைகொண்டுள்ள உயிருள்ள தாவர செல்களை உட்ட ஊடகத்தில் வளர்க்கும் போது அவை முழு தனி தாவரமாக வளர்ச்சியடையும் பண்பே முழு ஆக்குத்திறன் எனப்படும்.<br>2. **வேறுபாடுறுதல்:** செல்களில் உயிரி, வேதியிய மற்றும் அமைப்பிய மாற்றங்களை ஏற்படுத்தி அவற்றை சிறப்பான அமைப்பு மற்றும் பணியினை மேற்கொள்ள செய்தல்.<br>3. **மறு வேறுபாடுறுதல்:** ஏற்கனவே வேறுபாடுற்ற ஒரு செல் மேலும் வேறுபாடுற்று மற்றொரு செல்லாக மாற்றமடைதல். எ.கா ஊட்டச்சத்து ஊடகத்தில் கேலஸ் திசுவின் செல் கூறுகள் முழுத்தாவர அமைப்பை உருவாக்கும் திறன் பெற்றுள்ளதை மறு வேறுபாடுறுதல் எனலாம்.<br>4. **வேறுபாடிழத்தல்:** முதிர்ச்சி அடைந்த செல்கள் மீண்டும் ஆக்கத்திசுவாக மாறி கேலஸ் போன்ற திசுவை உருவாக்கும் நிகழ்வு வேறுபாடு இழத்தல் என அழைக்கப்படுகிறது. | 1<br><br>1<br><br>1<br><br>1<br><br>1 |
| 36.ஆ | 1. **குறுகியகாலம் வாழும் ஒருபருவத் தாவரங்கள்**<br>2. **சதைப்பற்றுடைய அல்லது நீரைச்சேமித்து வைக்கக்கூடிய தாவரங்கள்**<br>3. **சதைப்பற்றற்ற அல்லது நீரைச் சேமிக்க இயலாத தாவரங்கள்**<br>**குறுகியகாலம் வாழும் ஒருபருவத் தாவரங்கள்**( விளக்கம் மற்றும் ஏதேனும் ஒரு எ.கா)<br>**சதைப்பற்றுடைய அல்லது நீரைச்சேமித்து வைக்கக்கூடிய தாவரங்கள்**( விளக்கம் மற்றும் ஏதேனும் ஒரு எ.கா)<br>**சதைப்பற்றற்ற அல்லது நீரைச் சேமிக்க இயலாத தாவரங்கள்**( விளக்கம் மற்றும் ஏதேனும் ஒரு எ.கா) | 1<br><br>1<br><br>1½<br><br>1½ |

| | | |
|---|---|---|
| 37.அ. | அ) சூழல் மண்டலம் இருவகைப்படும்.<br>இயற்கை சூழல் மண்டலம் (மனித தலையீடு இல்லாத)<br><br>செயற்கை (அ) மனிதனால் உருவாக்க்கப்பட்ட சூழல் மண்டலம்<br>எ.கா: நெல் வயல், சோள வயல்.<br><br>இயற்கை சூழல் மண்டலம் இருவகைப்படும்.<br>1. நிலச்சூழல் மண்டலம் எ.கா. புல்வெளி சூழல் மண்டலம், பாலைவனச் சூழல் மண்டலம், வனச்சூழல் மண்டலம்.<br>2. நீர்ச் சூழல் மண்டலம் எ.கா. திறந்த நீர் நிலை.நீர்ச் சூழல் மண்டலம் இருவகைப்படும்.<br>1. நன்னீர் சூழல் மண்டலம்<br>2. கடல் சூழல் மண்டலம்<br><br>நன்னீர் சூழல் மண்டலம் இரு வகைப்படும்.<br>1. லோடிக் (ஓடு நீர் நிலைகள்)<br>எ.க.ா. ஆறு, நீரூற்று, ஓடை<br>2. லெண்டிக் (நிலை நீர் நிலைகள்)<br>எ.கா. குளம் மற்றும் ஏரி<br>**(ஒவ்வொரு வகைக்கும் ஏதேனும் ஒரு எ.கா மட்டும்)** | 1<br><br>1<br><br>½<br><br>½<br><br>½<br><br>½<br><br>½<br><br>½ |
| 37.ஆ | 1. திடக்கழிவுகளை நிலத்தில் நிரப்புதல், எரித்து சாம்பலாக்குதல், மீட்பு, மறுசுழற்சி, உரமாக்குதல் மற்றும் உயர் வெப்பச்சிதைவு ஆகிய முறைகளை திடக்கழிவு மேலாண்மையாகும்.<br>2. திடக்கழிவு பொருட்களை சுத்தகரிப்பு மற்றும் அகற்றுவதற்கு புதிய தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்தி புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் கரிம எருவாக மாற்றியமைத்தல்.<br>3. உயிரிகளால் சிதைக்க முடியாத நச்சுத்தன்மை கொண்ட மின்னணுக் கழிவுகள் மனித நலத்தை அச்சுறுத்துகிறது. இவற்றை மறுசுழற்சி செய்யும் போது வெளியிடும் புகை மற்றும் கசிதல் நீர்நிலைக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாகும். இப்பிரச்சினையை குறைக்க இக்கழிவுகளை வேளாண் நில நிரப்புதலே ஒரு சிறந்த முறையாகும். | 2<br><br>1<br><br>2 |

| | | |
|---|---|---|
| 38.அ | 1 **குளிர்பாதுகாப்பு முறையில் சேமித்தல்**<br>2 **மரபணு வங்கி விதை சேமிப்பு**<br>3 **சுவல்பார்ட் விதை வங்கி** | 1 |
| | **குளிர்பாதுகாப்பு முறையில் சேமித்தல்**(விளக்கம்) | 2 |
| | **மரபணு வங்கி விதை சேமிப்பு**(விளக்கம்) | 1 |
| | **சுவல்பார்ட் விதை வங்கி**(விளக்கம்) | 1 |

38.ஆ.

| தாவர பெயர் | பயன்படும் பாகம் | மருத்துவ பயன்கள் | |
|---|---|---|---|
| துளசி | இலைகள், வேர்கள் | இலைகள்<br>1. தூண்டியாகவும்,<br>2. நுண்ணுயிர்,<br>3. உயர் இரத்த அழுத்த எதிர்ப்பியாகவும்,<br>4. பாக்டீரியாநீக்கியாகவும்,<br>5. கோழை அகற்றியாகவும் பயன்படுகிறது.<br>6. வேர் கஷாயம் மலேரியா காய்ச்சலுக்கு வியர்வையூக்கியாக பயன்படுகிறது. | 1 |
| நெல்லி | கனி | 1. புத்துணர்ச்சியூட்டியாகவும்,<br>2. நோய் எதிர்ப்பு ஊக்கியாகவும் செயல்படுகிறது.<br>3. நீண்ட ஆயுளை மேம்படுத்த,<br>4. செரிமானத்தை அதிகரிக்க,<br>5. மலச்சிக்கல்,<br>6. காய்ச்சல் மற்றும்<br>7. இருமலை குறைக்க பயன்படுகிறது. | 1 |
| குப்பைமேனி | இலைகள் | 1. வளையப்புழுக்களால் ஏற்படுகின்ற தோல்நோய்களை குணப்படுத்தவும்,<br>2. படுக்கை புண் மற்றும் தொற்றுப் புண்களை குணப்படுத்த பயன்படுகிறது. | 1 |
| வில்வம் | கனி | 1. இளங்கனி செரிமான குறைபாடுகளை குணப்படுத்தவும்,<br>2. குடல்வாழ் ஒட்டுண்ணிகளை அழிக்கவும் பயன்படுகிறது. | 1 |
| பிரண்டை | தண்டு, வேர் | 1. தண்டு மற்றும் வேரை அரைத்தெடுத்து தயாரக்கப்படும் களிம்பு எலும்பு முறிவுக்கு பயன்படுகிறது.<br>2. முழு தாவரமும் ஆஸ்துமா மற்றும் வயிறு தொடர்பாக குறைபாடுகளுக்கு பயன்படுகிறது. | 1 |

**(ஏதேனும் ஒரு பயன்படும் பகுதி மற்றும் பயன் : 1 மதிப்பெண்)**